## சுருக்கம்

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – அறிவிப்புகள் – முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் – தமிழ்நாட்டின் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியர் பயனடையும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 2025–26–ஆம் நிதி ஆண்டில் விரிவுபடுத்துதல் – தொடரா செலவினங்களுக்கு கூடுதல் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை**

அரசாணை (நிலை) எண்.96

நாள் 08.10.2025
திருவள்ளுவர் ஆண்டு 2056
விசுவாவசு, புரட்டாசி 22
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.71, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, நாள் 27.06.2025.
2. சமூக நல இயக்குநரின் கடித ந.க.எண்.775935/சஉதி2(1)/2025, நாள் 29.08.2025

------

ஆணை:–

மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச்சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்கள், 2025–2026–ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பிறவற்றினிடையே, வெளியிடப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் நகர்ப்புற உள்ளாட்சி பகுதிகள் மற்றும் பேரூராட்சி பகுதிகளில் செயல்படும் அரசு நிதி உதவி பெறும் 2,429 தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் 3,06,916 மாணவ மாணவியர் பயனடையும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 2025–2026–ஆம் நிதி ஆண்டில் விரிவுப்படுத்தியும் 2025–2026–ஆம் நிதி ஆண்டில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை விரிவுபடுத்திட தொடர் செலவினமாக ரூ.85,81,98,519/– மற்றும் தொடரா செலவினமாக ரூ.1,77,57,375/–ஐ ஒப்பளிப்பு செய்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் EMIS தரவுகளின் அடிப்படையில் தற்பொழுது முழுமையாக பரிசீலித்ததில் சில பள்ளிகளின் விவரங்கள் நகர்புற பகுதி என்பதற்கு பதிலாக ஊரக பகுதி என குறிக்கப்பட்டிருந்தது தெரிய வந்தது எனவும், மேற்குறிப்பிட்ட பள்ளிகள் நகர்புற பகுதிகளில் சேர்த்துள்ளமையால் பள்ளிகளின் எண்ணிக்கை 2458 என இறுதி

செய்யப்பட்டுள்ளது எனவும், மேலும் 2025-2026 ஆம் கல்வி ஆண்டில் மாணவ/மாணவியர்களின் சேர்க்கை விகிதம் குறைந்துள்ளதால் பள்ளிகளின் எண்ணிக்கை கூடுதலானாலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது என சமூக நல இயக்குநர் தெரிவித்துள்ளார்.

4. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை விரிவுபடுத்துவதற்காக வெளியிடப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நகர்புற உள்ளாட்சி பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் 2,429 பள்ளிகளுக்கு பதிலாக 2,458 என உரிய திருத்தங்கள் அடங்கிய ஆணை வழங்குமாறும், கூடுதலாக பேரூராட்சி பகுதிகளில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் கீழ் இயக்கும் 61 (682 பள்ளிகளுக்கு பதிலாக திருத்திய பள்ளிகளின் எண்ணிக்கை 743) அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு சமையல் உபகரணங்கள், எரிவாயு இணைப்பு போன்ற தொடரா செலவினங்களுக்கு ரூ.13,42,450/- வழக்குமாறும் சமூக நல இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

5. சமூக நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்தது. அதனடிப்படையில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவுபடுத்துவது தொடர்பாக வெளியிடப்பட்ட மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசு உதவி பெறும் நகர்புற உள்ளாட்சிப் பகுதிகளில் இயங்கும் பள்ளிகளின் எண்ணிக்கையினை 2,429 பள்ளிகள் என்பதற்கு பதிலாக 2,458 பள்ளிகளாக (சென்னை பெருநகர மாநகராட்சி பள்ளிகள் – 219, நகராட்சி நிர்வாக பள்ளிகள் – 1496, பேரூராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிகள்– 743) மாற்றம் செய்தும் அவ்வாறு மாற்றம் செய்வதால் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழகத்தின் கீழ் இயக்கும் பேரூராட்சி பகுதிகளில் 682 பேரூராட்சி பள்ளிகளுக்கு சமையல் உபகரணங்கள், எரிவாயு இணைப்பு போன்ற தொடரா செலவினங்களுக்கு மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்கெனவே ரூ.1,77,57,375/- ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் தற்போது கூடுதலாக 61 (682 பள்ளிகளுக்கு பதிலாக திருத்திய பள்ளிகளின் எண்ணிக்கை 743) அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளுக்கு சமையல் உபகரணங்கள், எரிவாயு இணைப்பு போன்ற தொடரா செலவினங்களுக்கு ரூ.13,42,450/- ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது.

6. மேலே பத்தி 5-ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> 2236 – சத்துணவு – 02 – சத்துணவு மற்றும் பானங்கள் வழங்குதல் 102 – மதிய உணவு மாநிலச் செலவினங்கள் – BG முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் கீழ் அனைத்து பள்ளி நாட்களிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்குதல் – 309 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை.
>
> IFHRMS (த.தொ. கு: 2236 02 102 BG 30903

7. மேலும், 2025–26 வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்படி செலவினத்தை மேற்கொள்ளவும், நடைமுறையிலுள்ள விதிமுறைகளின்படி மேற்படி சமையல் உபகரணங்களை கொள்முதல் செய்திடவும் சமூக நல இயக்குநருக்கு அனுமதி வழங்கப்படுகிறது.

8. இவ்வாணை, நிதித் துறையின் மின் அலுவலக எண்.10070967/ நிதி(சந)/2025, நாள் 30.09.2025–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெயஸ்ரீ முரளீதரன்
அரசு செயலாளர்

பெறுநர்,
சமூக நல இயக்குநர், சென்னை–5.
ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–3.
இயக்குநர், நகராட்சி நிர்வாகத் துறை, சென்னை–28.
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–15.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை–34.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (சமூக நல ஆணையர் வழியாக).
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், (தணிக்கை–I/II), சென்னை–18.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள் (சமூக நல இயக்குநர் வழியாக).
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை–9.

நகல்.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு நிதி மற்றும் சுற்றுச் சூழல் (ம) காலநிலை மாற்றத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதி (ச.ந.)த்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (ச.ந.2) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜெ.எ.ஜெர்லின் ரஞ்சனி
08.10.2025

பிரிவு அலுவலர்
8/10/25